# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய செய்தியைக் கூறுவது

அ) தென்னாலியின் கதை ஆ) ஆபுத்திரன் கதை
இ) கோவலன் கதை ஈ) நோவாவின் கதை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. குலோத்துங்கனின் அரசவையில் விறகுவெட்டியைக் காப்பாற்றிய புலவர்

அ) ஒட்டக்கூத்தர் ஆ) நக்கீரர்
இ) கம்பர் ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. கி.மு. 1500இல் கைபர் கணவாய் ஊடாக நாவலந்தீவில் நுழைந்தவர்கள்

அ) ஆங்கிலேயர் ஆ) ஆரியர் இ) ஒல்லாந்தர் ஈ) தமிழர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. குறள்:- **குன்றி னனையாருங் ____________ குன்றுவ**
**குன்றி யனைய செயின்**

அ) குறைவார் ஆ) குன்றுவர் இ) குன்றார் ஈ) குறைவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இலங்கையில் தமிழருக்கு இருந்த சிறிதளவு உரிமையும் முற்றாக மறுக்கப்பட்ட ஆண்டு

அ) 1957 ஆ) 1971 இ) 1965 ஈ) 1958

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. நீ வந்தான் என்பது

அ) காலவழு ஆ) இடவழு இ) வினாவழு ஈ) மரபுவழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. இமயமலையின் உச்சியில் மீன்கொடி ஏற்றியவன்

அ) பாண்டியன் ஆ) கனகவிசயர்
இ) சேரன்செங்குட்டுவன் ஈ) சேரலாதன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. "நேற்று மதிப்புடன் வாழ்ந்தோம்! - இந்த
நிலத்தின் திசைகள் அனைத்தையு மாண்டோம்" ! என்று பாடியவர்

அ) கண்ணதாசன் ஆ) புகழேந்தி
இ) கனகசுப்புரத்தினம் ஈ) காசிஆனந்தன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பின்வருவனவற்றுள் இடைத்தொடர்க் குற்றியலுகரம்

அ) பஞ்சு ஆ) எஃகு இ) சால்பு ஈ) பாக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஒருவனுக்கு எப்போது பணிவு வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?

அ) வறுமை வந்தபோது ஆ) செல்வம் பெருகும்போது
இ) செல்வம் குறையும்போது ஈ) நோய் வந்தபோது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கரணியப் பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மண் ஆ) பறவை இ) மலை ஈ) மரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. இலங்கை முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்த ஐரோப்பியர்

அ) ஆங்கிலேயர் ஆ) ஒல்லாந்தர்
இ) போர்த்துக்கேயர் ஈ) பறங்கியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. குமரிக்கண்டத்தில் இருந்த நிலப்பரப்புகளில் ஒன்று

அ) கனடா ஆ) அமெரிக்கா இ) நோர்வே ஈ) அவுத்திரேலியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பின்வருவனவற்றுள் **உவமைத்தொடர்**

அ) கயிறுதிரித்தல் ஆ) நடந்துநடந்து
இ) மேலும்கீழும் ஈ) மலரும் மணமும் போல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. "**காலையிளம் பரிதியிலே அவளைக்கண்டேன்....** என்ற பாடலைப் பாடியவர்

அ) இளங்கோ ஆ) கம்பர்
இ) பாவேந்தர் ஈ) முடியரசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. **சால, உறு, தவ, நனி** என்பன

அ) வினைச்சொற்கள் ஆ) இடைச்சொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) பெயர்ச்சொற்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இசைக்குலத்தோர் எனப்படுவோர்

அ) கூத்தர், விறலியர் ஆ) பாணன், பாடினி

இ) கூத்தன், கூத்தி ஈ) கூத்தர், பாணர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. வளைந்த தன் செங்கோலை உயிர் கொடுத்து நிமிர்த்தியவன்

அ) சேரன் செங்குட்டுவன் ஆ) இமயவரம்பன்

இ) பாண்டிய மன்னன் ஈ) நெடுஞ்சேரலாதன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. **விரைந்து** என்பது

அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்

இ) வினைமுற்று ஈ) வினையடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பின்வருவனவற்றுள் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று

அ) குறுந்தொகை ஆ) பதிற்றுப்பத்து

இ) நெடுநல்வாடை ஈ) பரிபாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. நாள் + காட்டி என்பதைச் சேர்த்தால்

அ) நாட்காட்டி ஆ) நாட்க்காட்டி இ) நாள்க்காட்டி ஈ) நாள்காட்டி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. செவ்வந்திப்பொழுது என்பது

அ) சாயுங்காலம் ஆ) அதிகாலை இ) வைகறை ஈ) யாமம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. இந்தியாவுக்கும் பாக்கித்தானுக்கும் இடையே பாயும் நதி

அ) சிந்து ஆ) காவேரி இ) கங்கை ஈ) யமுனா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. வில்லிசையில் வில்லுடன் இன்று இசைக்கப்படும் கருவிகளில் ஒன்று

அ) வீணை ஆ) ஏழில் இ) தண்ணுமை ஈ) யாழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. அறிவின் அடக்கம் என்பதை விளக்கும் பழமொழி

அ) பதறாத காரியம் சிதறாது ஆ) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு

இ) நிறைகுடம் தளம்பாது ஈ) கழுதை அறியுமா கற்பூர வாசனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **ஒன்றேகால்** என்பது

அ) அன்மொழித்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) வினைத்தொகை ஈ) உவமைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. **நெற்றிக்கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே** என்று கூறிய புலவர்

அ) நக்கீரர் ஆ) கம்பர் இ) ஒட்டக்கூத்தர் ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. **கானகம்** என்பது

அ) தனிமொழி ஆ) பொதுமொழி இ) தொடர்மொழி ஈ) நிலைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. **'வேரல்வேலி வேர்க்கோள் பலவின்.....** என்ற பாடல்வரி இடம்பெற்றது

அ) புறநானூற்றில் ஆ) குறுந்தொகையில் இ) பரிபாடலில் ஈ) திருக்குறளில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. **கே** என்பது

அ) உயிரெழுத்து ஆ) மெய்யெழுத்து இ) சார்பெழுத்து ஈ) முதலெழுத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

| புள்ளிகள் 30 |
|---|

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. தேவநேயப்பாவாணருக்குச் சான்றோரால் வழங்கப்பட்ட பட்டங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

2. தமிழர் புலப்பெயர்விற்கான கரணியங்கள் இரண்டைத் தருக.

3. இமயத்திலிருந்து வந்த துறவிகள் சேரன்செங்குட்டுவனுக்கு என்ன கூறினர்?

4. குறள் : ***இளிவரின் வாழாத மான முடையா***

   ***ரொளிதொழு தேத்து முலகு***

   இக் குறளின் பொருளைத் தருக.

5. **"குடவாயிற் கீர்த்தனார் முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"** என்று முல்லைக் கொடியைப் பார்த்துக் கூறியது ஏன்?

6. இயற்கை இன்பம் என்ற பாடத்தில் மருதநிலம் எதைப்போன்று காட்சியளிப்பதாகக் கம்பர் கூறுகின்றார்?

7. இலங்கை அரசால் ஏன் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது?

புள்ளிகள் 10

3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கோவூர்க்கிழார் உறையூருக்கு அருகிலுள்ள கோவூரில் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே கல்விகேள்விகளில் சிறந்து விளங்கினார். இவர் சான்றோர் பலரை அணுகி இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். கவிதைகள் எழுதுவதில் ஆற்றல் பெற்றார். நற்பண்புகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தார். நற்றிணை, குறுந்தொகை புறநானூறு, திருவள்ளுவமாலை ஆகியவற்றுள் இவரின் பதினெட்டுப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நலங்கிள்ளி என்னும் மன்னன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான். இம்மன்னன் கோவூர்க்கிழாரின் புலமையைப் பலர் வாயிலாகக் கேட்டு அறிந்தான். தம் அவைக்கு அவரை அழைத்து அரசஅவைக்களத் தலைவராக்கினான். அவரிடம் நட்புக் கொண்டு அவருக்குப் பல சிறப்புகளைச் செய்தான். அதனால் மகிழ்ந்த புலவர் நலங்கிள்ளியின் புகழ் விளங்கப் பல பாடல்களை இயற்றினார். அஞ்சா நெஞ்சமுடைய இப்புலவர் யார் தவறு செய்தாலும் அத்தவறினைச் சுட்டிக் காட்டி அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் இனிமையாகச் சொல்லித் திருத்துவதில் வல்லவர். அரசர்களானாலும் பிறரானாலும் கோவூர்க்கிழார் சொல்வதனை ஏற்றுச் செயற்பட்டனர்.

1. கோவூர்க்கிழாரின் பாடல்கள் இடம்பெற்றுள்ள நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

___________________________________________

___________________________________________

2. உறையூரைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டை ஆண்ட மன்னன் யார்?

___________________________________________

___________________________________________

3. கோவூர்க்கிழார் சான்றோரை அணுகி எவற்றைக் கற்றுத் தேர்ந்தார்?

___________________________________________

___________________________________________

4. புலவர் யாருடைய புகழ் விளங்கப் பாடல்களை இயற்றினார்?

___

___

5. நலங்கிள்ளி யாரை அவைத் தலைவராக்கினான்?

___

___

புள்ளிகள் 10

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.

# மாவீரர்

| | | | | |
|---|---|---|---|---|
| காத்து | பகைவர் | உயிரை | எமை | மண்ணிலிருந்து |

இரவுபகல் தூங்காமல் எங்களுக்காய் விழித்திருந்தீர்

எதிரிகளை எம் ________________ விரட்டிவிட்டீர்

கண்களிலே தாயகக் கனவுகளைச் சுமந்திருந்தீர்

காலமெல்லாம் ________________ க் காக்கப் பாடுபட்டீர்

செங்களமாடியே செந்நீரில் நீர் குளித்தீர்

செருக்களம் தன்னில் ________________ கதை முடித்தீர்

தலைவன் கண்ணசைவிற்காய்க் ________________ நீர் கிடந்தீர்

தன்மானத்துடன் தலை நிமிர்ந்து நீர் நடந்தீர்

எங்கள் விடிவுக்காய் உம் ________________ நீர் துறந்தீர்

எந்நாளும் அழியாது எம் மனதில் நீர் நிலைத்துவிட்டீர்

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. தொகைகள் எத்தனை? பண்புத்தொகை, வினைத்தொகை என்பனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

பண்புத்தொகை :- ______________________________

வினைத்தொகை :- ______________________________

2. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

வால் :- ______________________________

வாள் :- ______________________________

வாழ் :- ______________________________

3. பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்? சினைப்பெயர், இடப்பெயர் என்பனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

சினைப்பெயர் :- ______________________________

இடப்பெயர் :- ______________________________

4. சொற்பொருள் தருக.

புனல் :- ______________ பார்ப்பு :- ______________

ஏரணம் :- ______________ கணை :- ______________

ஏதிலியர் :- ______________ எழினி :- ______________

5. இயல்பு வழக்கு எத்தனை வகைப்படும்? பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

இலக்கணப்போலி : ______________________________

மரூஉ : ______________________________

புள்ளிகள் 15

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

We should'nt forget our motherland. We must learn about our motherland. Our fathers and mothers were born there. They grow up there and attended school there. They always spoke in mother tongue, tamil. Even if we live in a foreign country we should learn to speak in tamil. We also must study our mother tongue tamil in Tamil schools. We must get knowledge in tamil language. Only then can we live as tamils.

Vi må aldrig glemme vores fædreland. Vi burde alle at kende til vores fædreland. Der blev vores fædre og mødre født. Der voksede de op og gik i skole. Der talte de altid deres modersmål, tamilsk. Selvom vi nu lever i andre lande, burde vi alle lære at tale tamilsk. Vi burde tale tamilsk med alle. Og vi burde lære vores modersmål tamilsk på tamilske skoler. Vi burde tillegne os en masse viden gennem vores tamilske sprog. Således kan vi leve som en tamiler.

Noi non dobbiamo dimenticare la nostra madre patria. Dobbiamo conoscere la nostra madre patria. I nostri padri e le nostre madri sono nati lì. Loro sono cresciuti e sono andati a scuola lì. Là loro hanno sempre parlato la nostra madre lingua, il Tamil. Anche se noi viviamo in un paese straniero, dobbiamo imparare a parlare la lingua Tamil. Dobbiamo parlare con tutti in Tamil. Dobbiamo imparare la nostra madre lingua nelle scuole Tamil. Dobbiamo raggiungere una buona conoscenza della nostra madre lingua. Solo allora potremmo vivere come persone Tamil.

Wij moeten onze moederland niet vergeten. Wij moeten leren over onze moederland. Onze vaders en moeders waren daar geboren. Ze waren daar gegroeid en hebben de school bezocht. Ze spraken altijd in onze moedertaal, Tamil. Ook al leven wij in het buitenland, wij moeten leren om Tamil te praten. We moeten onze moedertaal ook op Tamil scholen leren. We moeten kennis krijgen in Tamil. Alleen dan kunnen we leven als Tamils.

Vi får inte glömma bort vårt moderland. Vi borde ha kunskap om vårt moderland. Det var där våra mödrar och fäder var födda. De växte upp och gick i skolan där. Där talade de hela tiden på deras modersmål tamilska. Även om vi är uppväxta i utlandet måste vi lära oss att tala på tamilska. Vi måste prata på tamilska med alla. Vi måste studera vårt modersmål tamilska på tamilska skolor. Vi måste skaffa stora kunskaper i det tamilska språket. Det är då vi kan leva som tamiler.

Vi må aldri glemme vårt fedreland. Vi må lære om vårt fedreland. Våre fedre og mødre var født der. De vokste opp og gikk på skolen der. De snakket alltid sitt morsmål, tamil. Selv om vi lever i et fremmed land, må vi alltid lære oss å snakke tamil. Vi må også studere vårt morsmål tamil på tamilskoler. Vi må få kunnskap til det tamilske språket. Bare på denne måten kan vi leve som tamiler.

Wir sollten nicht unser Vaterland vergessen. Wir sollten uns über unser Vaterland informieren. Unsere Mütter und unsere Väter sind dort geboren. Sie sind dort aufgewachsen und haben dort die Schule besucht. Dort haben sie immer auf ihrer Muttersprache Tamil gesprochen. Auch wenn wir im Ausland leben, sollten wir üben auf Tamil zu sprechen. Mit allen sollten wir auf Tamil sprechen. Wir sollten die Muttersprache Tamil in tamilischen Schulen lernen. Wir sollten uns viel Wissen in der tamilischen Sprache aneignen. Erst dann können wir als Tamilen leben.

Nous ne devons jamais oublier notre patrie et aussi connaitre l'histoire de notre patrie. Nos pères et nos mères sont nés là-bas. Ils ont grandi et sont allés à l'école dans leur pays natale. Ils parlaient toujours en tamoul qui est leur langue maternelle. Même si nous vivons à l'étranger, nous devons tout de même apprendre à parler en tamoul et aussi parler en tamoul avec tout le monde. Le tamoul, notre langue maternelle, doit être appris dans les écoles tamoules. Nous devons avoir des connaissances sur la langue tamoule. C'est seulement à partir de ce moment-là que nous pouvons vivre en tant que Tamouls.

புள்ளிகள் 05

7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

- சேரமான் வஞ்சினம்
- இலங்கைத்தீவின் விடுதலையும் ஈழத்தமிழர் வாழ்வும்
- சூழல் மாசடைவதற்கான கரணியங்களும் அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும்

புள்ளிகள் 20